6071

சுருக்கம்

புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் – பகுதி II திட்டம் 2007-08 - சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத்துறை 2007-2008–ஆம் ஆண்டிற்கு சத்துணவு மையங்களில் பதிலாக புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்க ரூபாய் 50.00 லட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி1) துறை

அரசாணை (நிலை) எண். 80

நாள் 30–05–2007

படிக்கப்பட்டது:-

1) அரசு ஆணை (நிலை) எண்.139, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22–9–2006
2) சமூக நல இயக்குநரின் ந.க.எண்.18121/சஉதி/2007 நாள் 17.4.2007

-----

ஆணை:-

மேலே, ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2006–2007 ஆம் ஆண்டிற்கு சத்துணவு மையங்களில் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்த முடியாத அலுமினியப் பாத்திரங்களுக்கு பதிலாக புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்க ரூபாய் 50 இலட்சங்கள் செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டது.

2) தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 10–4–2007 அன்று சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் சத்துணவு மையங்களுக்கும் குழந்தைகள் மையங்களுக்கும் சமையல் பாத்திரங்கள் வாங்கவும் சமையலறைகளை நவீனப்படுத்தவும் நடப்பு ஆண்டில் ரூபாய் 4 கோடியே 51 இலட்சம் செலவிடப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் 1667 சத்துணவு திட்ட மையங்களுக்கு தலா ரூ.3000/- வீதம் கீழ்க்கண்ட அளவு எடையுள்ள சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு சமூக நல இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டார்.

| | |
|---|---|
| 1. அலுமினிய அடுக்கு | – 16'' வி 18 கேஜ் 8'' உயரம் |
| 2. அலுமினிய அடுக்கு | – 18'' வி 16 கேஜ் 14'' உயரம் |
| 3. அலுமினிய அடுக்கு கைப்பிடி மற்றும் மூடியுடன் | – 24''வி 14 கேஜ் 14'' உயரம் |

3. மேற்கண்ட செயற்குறிப்பை அரசு கவனத்துடன் பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின்னர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் 1667 சத்துணவு மையங்களுக்கு பயன்படுத்த முடியாத அலுமினிய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய அலுமினிய பாத்திரங்கள் மேலே பத்தி–2ல் குறிப்பிடப்பட்ட அளவுகளின்படி வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மிகாமல் செலவினம் மேற்கொள்ள சமூக நல இயக்குநருக்கு ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது. அத்தொகையை பயன்படுத்தி ஊரகப் பள்ளி மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு திட்ட மையங்களுக்கு தலா ரூ.3000/– க்கு மிகாமல் புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்கி வழங்க ஆணையிடப்படுகிறது.

4) மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

250

"2236–சத்துணவு 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 மதிய உணவு–I திட்டத்தில் சோரதது AX புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் சமையல் பாத்திரங்களை மாற்றுதல் 24 பொருட்களும் வழங்கலும் (தா.தொ.கு.2236–02–102–AX 2408)

5) ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி ஊரகப் பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களுக்கும் தேவையான புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்கி வழங்க தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தேவைப்படும் நிதியினை பிரித்து வழங்கவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் 2007-08ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களை தேர்வு செய்யவும், ஒப்பளிக்கப்பட்ட தொகையை மாவட்டங்களுக்கு பங்கீடு செய்யவும், அலுமினிய பாத்திரங்கள் வாங்கி வழங்கப்படுவதை கண்காணிக்கவும், சமூக நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6) மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டவாறு சத்துணவு மையங்களுக்கு புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்கும் நிகழ்வில் உரிய விதிமுறைகள் (purchase procedures) பின்பற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

7) அனுமதி அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தியது குறித்து பயனீட்டுச் சான்றினை அரசுக்கு உடன் அனுப்பிவைத்திடுமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8) அரசாணை நிலை எண் 1, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 30–1–97–ன்படி பயனற்றுப்போன பழைய பாத்திரங்களை மையங்களிலிருந்து பெற்று, தொகுத்து உரிய அலுவலர் மூலமாக சந்தை நிலவர விலைப்படி ஏலம்விட்டு பெறப்படும் தொகையை அரசிற்கு இழப்பின்றி உரிய காலத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

" 0235–சமூக பாதுகாப்பும் நலனும் 60–ஏனைய சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் 800 ஏனைய வரவுகள் AL. முதலமைச்சர் மதிய உணவுத் திட்டம் (கு.தொ.கு.எண்.0235–60–800–AL - 0003"

இது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9) இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது இசைவினை அ.சா.கு.எண்.31610/SW/07 நாள் 23.5.2007ல் அளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–5.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–6/9/18/35
மாநில கணக்காயர், சென்னை–9/18/35
தலைமை அரசுத் துறை நிறுவனத் தனிக்கையர்,
செங்கல்வராயன் மாளிகை,
807, அண்ணா சாலை, சென்னை–2.
நகல்
நிதி (சந) மற்றும் நிதி (வசெ) துறை, சென்னை 9.
சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந2 மற்றும் சந7) துறை, சென்னை 9,

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

3/12/12

Personal Assistant to
the Collector (N. M. P.)
Vellore Dist, VELLORE-9

251